

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 86 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 19 – செவ்வாய்க்கிழமை 05 நவம்பர் 2024 – திருச்சி ★★ 10 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 86 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 19 - Tuesday 05 November 2024 - Trichy ★★ 10+8 Pages ₹ 5.00


## பன்னோக்கு மையம் பகிர்ந்த பணியிடம்!

# கொளத்தூர் தொகுதியில் ‘முதல்வர் படைப்பகம்!’

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரை !



**சென்னை, நவ.5-**

**கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் படிப்புத் தளம், பணியாற்றும் தளம், உணவு தளம் ஆகியவை அடங்கிய ‘முதல்வர் படைப்பகத்தை’ முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று திறந்து வைத்து சிறப்புரை யாற்றினார்!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கொளத்தூர் தொகுதியில் தன்னுடைய சொந்த முயற்சியால் அத் தொகுதி மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொண்டிருக்கின்றார் என்றால் அதற்கு மாறுபட்ட கருத்து இருக்க முடியாது.

அந்த வகையில் ஏற்கனவே கணினி பயிற்சி வகுப்பு, மறைந்த அனிதாவின் நினைவாக அவரது பெயரிலேயே துவங்கப்பட்டு முழுக்க பெண்களுக்கென்று தனியாக ஒரு கணினி மையத்தை கட்டணமில்லா பயிற்சி மையத்தை உருவாக்கினார், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அதைத் தொடர்ந்து, கொளத்தூர் தொகுதியில் ஆண்களுக்கு என்று கட்டணம் இல்லாமல் கணினி பயிற்சி மையத்தை உருவாக்கினார். தையல் பயிற்சிக் கூடத்தை கட்டணம் இல்லாமல் உருவாக்கினார். இந்த மூன்று பயிற்சிக் கூடத்தில் பயலுகின்ற மாணவச் செல்வங்களுக்கு எந்தவித கட்டணமும் இல்லாமல் அவர்கள் பயிற்சி முடித்த பிறகு கணினி பயிற்சி முடித்தவர்களுக்கு இலவசமாக மடிக்கணினியும், Tally தேர்வுக்குண்டான கட்டணத்தையும் தானே தன் சொந்த பொறுப்பில் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு அந்தப் பயிற்சிகளை முடித்ததற்கான சான்றிதழ்களும், மடிக்கணினியும் கட்டணம் இல்லாமல் வழங்கி கொண்டு வருகின்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

அதேபோல் தையல் பயிற்சி முடித்தவர்களுக்கும் தையல் பயிற்சி முடிவுற்ற பிறகு அவர்களுக்கு பல்வேறு பரீட்சைகள் வைக்கப்பட்டு அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழும், அதேபோல் இலவசமாக மோட்டார் பொருத்திய தையல் இயந்திரமும் வழங்கப்படுகின்றது. குறிப்பாக பெண்களின் முன்னேற்றத்திற்கு பாடுபடுபவர் நமது முதலமைச்சர் என்பது ஆட்சியில் இருக்கும்போது மட்டும் இல்லாமல் ஆட்சியில் இல்லாதபோதும், பெண்கள் கணினி கற்பதற்காக கணினி பயிற்சி வகுப்பு ஏற்படுத்தப்பட்டு மறைந்த அனிதா பேரிலே இயங்கி வருகிறது. தொடர்ந்து அந்த மையத்திலே பயின்று இதுவரையில் 2000க்கும் மேற்பட்ட பெண்கள் பலனடைந்திருக்கின்றார்கள்.

### 105 பேருக்கு கணினி! 360 பேருக்கு தையல் இயந்திரம்!

13வது நிகழ்வாக அதாவது 13வது பேட்ச்சாக நேற்று (நான்காம் தேதி) அதில் பயிற்சி முடித்தவர்களுக்கு கணினி வழங்கினார். 105 பிள்ளைகளுக்கு கணினியும், 360 பிள்ளைகளுக்கு தையல் இயந்திரமும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

### இலவச கண் சிகிச்சை முகாம்!

அதோடு முதல்வர் அவர்கள் இலவசமாக கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு இலவச கண் சிகிச்சை மையத்தை தொடங்கினார். அந்த இலவச கண் சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெறுபவர்களுக்கு கண் குறைபாடு உள்ளவர்களுக்கு எந்த விதமான கட்டணமும் இல்லாமல் மூக்கு கண்ணாடி மற்றும் புத்தாடைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அதேபோல் கண் புரை அறுவை சிகிச்சை என்பது கட்டணம் இல்லாமல் சொந்த ஏற்பாட்டில் அகர்வால், சங்கர நேத்ராலயா போன்ற உயர்தர மருத்துவமனைகள் மூலமாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றன.

### ‘முதல்வர் படைப்பகம்’ திறப்பு!

அதன் ஒரு நிகழ்வாக நேற்றைக்கு ‘முதல்வர் படைப்பகம்’ என்ற பெயரில். சென்னை பெருநகர மாநகராட்சியும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமமும் இணைந்து சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தமிழக முதல்வர் அவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியை கொண்டு புதிதாக “முதல்வர் படைப்பகம்” என்பதையும் நேற்று (நவம்பர் 4 ஆம் தேதி) முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்த படைப்பகத்தில் வருகின்றவர்களுக்கு படிப்பதற்கென்று ஒரு தளமும், அதை போல் பணியாற்றுவதற்கு என்று ஒரு தளமும், உணவு அருந்துவதற்கு உணவுக் கூடம் என்ற ஒரு தளமும் மூன்று தளங்களைக் கொண்ட இந்த கட்டடம் மாணவர்களுக்கு மிகவும் பயன்படும் வகையில் அமைந்திருக்கிறது. மேலும் ஒரே முறையில் 51 நபர்கள் படிக்கின்ற அளவிற்கு படிக்கின்ற வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த படிப்பிற்குத் தேவையான புத்தகங்களை கொண்ட ஒரு நூலகமும் அங்கே அமைந்துள்ளன.

அதேபோல் கோ ஓர்க்கிங் ஸ்டேஷன் எனப்படுகின்ற, அவர்கள் பணி செய்வதற்குண்டான ஒரு தளமும் அங்கே உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் அதில் 38 நபர்கள் ஒரே முறையாக படிப்பதற்குண்டான நல்ல சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளன. அதில் 3 கலந்தாய்வுக் கூடம் (Conference Hall) உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கலந்தாய்வுக் கூடத்தில் இரண்டில் 4 நபர்களும், ஒன்றில் 6 நபர்களுக்கும் இதில் உட்கார்ந்து பணிகளை மேற்கொள்வதற்கான கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளன. இதனையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று ( 4ம் தேதி ) கொளத்தூரில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் சென்னையிலே ஏற்படுத்தப்படுகின்ற முதல் கோ ஓர்க்கிங் ஸ்பேஸ் (1st Co Working Space) எனப்படும் “முதல்வர் படைப்பகம்” கட்டடத்தையும் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர் மற்றும் அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

---

## வெற்று வாக்குறுதிகளால் பதவியின் கண்ணியத்தை பிரதமர் அழித்து விட்டார்!

# வேலையின்மை வரலாறுகாணாத வகையில் அதிகரித்துள்ளது!

## வயநாடு தேர்தல் பிரச்சாரத்தில் பிரியங்கா காந்தி பேச்சு!

வயநாடு, நவ.5-

நாட்டில் வேலைவாய்ப்பின்மை வரலாறு காணாத வகையில் அதிகரித்துள்ளதாக வயநாடு தேர்தல் பிரச்சாரத்தில் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

கேரள மாநிலம் வயநாடு மக்களவைத் தொகுதி இடைத்தேர்தல் வரும் 13ஆம் தேதி நடைபெறுகிறது. காங்கிரஸ் சார்பில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி போட்டியிடுகிறார். முதல்முறையாக தேர்தல் களத்திற்கு வந்துள்ள பிரியங்கா காந்தி, கடந்த வாரம் தனது பிரச்சாரத்தை தொடங்கினார்.

அதன் தொடர்ச்சியாக, வயநாட்டில் நேற்று முன்தினம் முதல் மீண்டும் மக்களை சந்தித்து ஆதரவு திரட்டுகிறார். மனந்தவாடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய பிரியங்கா காந்தி, நாட்டில் வேலைவாய்ப்பின்மை வரலாறு காணாத வகையில் அதிகரித்துள்ளதாக குற்றம்சாட்டினார். கேரளாவில் புதிய மருத்துவக்கல்லூரிகள் துவங்க ஒன்றிய அரசு அனுமதி மறுத்து வருவதாகத் தெரிவித்த அவர், வயநாட்டில் மருத்துவ கல்லூரி துவங்க நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.



வயநாட்டில் நடைபெறும் மனித வன விலங்கு மோதல்கள் நடைபெறுவதை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் வாக்குறுதி அளித்தார்.

### ராகுல்காந்தி பிரச்சாரம்

இதனைத் தொடர்ந்த உரையாற்றிய ராகுல் காந்தி, தனது சகோதரியின் தேர்தல் பிரச்சாரத்திற்காக தான் முதல் முறையாக வந்துள்ளதாகக் கூறினார். தான் வயநாடு தொகுதி மக்கள் மத்தியில் உரையாற்றுவது தன் குடும்பத்தாருடன் உரையாடுவதை போன்ற உணர்வு ஏற்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக பிரியங்கா காந்தி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “உண்மையே கடவுள்” என்று மகாத்மா காந்தி சொல்வார். முண்டக உபநிஷத்தில் உள்ள “சத்யமேவ ஜெயதே” என்பது நமது தேசிய முழக்கம். உண்மையை நிலைநாட்டும் இந்த லட்சியங்கள், இந்திய சுதந்திர இயக்கம், இந்தியாவின் மறுசீரமைப்பு மற்றும் பொது வாழ்க்கையின் லட்சியங்களாக மாறின. உண்மையே பல்லாயிரம் ஆண்டுகால கலாச்சாரத்தின் அடிப்படையாக இருக்கும் நாட்டில், உயர்ந்த பதவியில் இருப்பவர் அசத்தியத்தை நாடக்கூடாது.

இந்திய தேசிய காங்கிரஸுக்கு எதிராக பிரதமர் கூறியுள்ள குற்றச்சாட்டுகள் உண்மைக்கு அப்பாற்பட்டவை. அடுத்த தேர்தலுக்காக காத்திருக்காமல், ஆட்சி அமைந்தவுடன் மாநில மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் பணியை காங்கிரஸ் கட்சி தொடங்கியுள்ளது. கர்நாடகா, தெலங்கானா, இமாச்சலப் பிரதேசம் என எதுவாக இருந்தாலும், காங்கிரஸ் ஆட்சி செய்யும் மாநிலங்களில், பொதுப் பணம், உத்திரவாதங்கள் மூலம் தினமும் மக்களின் பாக்கெட்டுகளில் போடப்படுகிறது.

நாட்டு மக்கள் முன் தனது வார்த்தைகளுக்கு இனி எந்த மதிப்பும் இல்லை என்பதை பிரதமர் புரிந்து கொண்டுள்ளார். 100 நாள் திட்டம், ஒவ்வொரு ஆண்டும் இரண்டு கோடி வேலை வாய்ப்புகள், 100 ஸ்மார்ட் நகரங்கள், கறுப்புப் பணத்தை மீட்பது, பண வீக்கம் மற்றும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பது, விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவது, டாலருக்கு நிகராக ரூபாயை கொண்டு வருவோம் என்றது, நல்ல நாட்களை கொண்டு வருவோம் என்றது... இவையெல்லாம் பொய்யாகிவிட்ட வாக்குறுதிகள் என்று நாடு முழுவதும் இப்போது குற்றம் சாட்டப்படுகிறது. பொது மக்களுக்கு நம்பிக்கை இல்லை.

140 கோடி இந்தியர்களுக்கு வெற்று வாக்குறுதிகளை மீண்டும் மீண்டும் அளித்து நாட்டின் உயரிய மற்றும் மரியாதைக்குரிய பதவியின் கண்ணியத்தை பிரதமர் அழித்துள்ளார். அவர் காங்கிரஸைப் பற்றி கவலைப்பட வேண்டாம். மாறாக, சத்தியத்தின் உதவியுடன் தனது பதவியின் கண்ணியத்தை மீட்டெடுக்க அவர் பாடுபட வேண்டும் என பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, “மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலில் நிதி ஆதாரத்துக்கு மீறி அதிக வாக்குறுதிகளை அளிக்க வேண்டாம் என்று அம்மாநில காங்கிரஸ் தலைவர்களை எச்சரித்துள்ளேன். உங்களால் முடிந்த அளவு மட்டும் வாக்குறுதிகளை அளிக்க வேண்டும். 5, 6, 10 அல்லது 20 உத்தரவாதங்களை அறிவிக்கக் கூடாது என்று கூறியுள்ளேன். நிதி ஆதாரத்தின் அடிப்படையில் உத்தரவாதங்கள் அறிவிக்கப்பட வேண்டும். இல்லையெனில், திவால் நிலை ஏற்படும். சாலைகள் போடுவதற்கு பணம் இல்லை என்றால், மக்கள் அனைவரும் உங்களுக்கு எதிராக திரும்புவார்கள். அரசாங்கம் தோல்வியுற்றால், வருங்கால சந்ததியினருக்கு கெட்ட பெயர் தான் மிஞ்சும்” எனத் தெரிவித்திருந்ததை சுட்டிக்காட்டி பிரதமர் மோடி தனது விமர்சனத்தை முன் வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## சென்னை கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டி!

# டிக்கெட்டுகளை இணைய தளம் மூலம் முன்பதிவு!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தகவல்!

**சென்னை, நவ.5-**

**சென்னை கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டித் தொடருக்கான டிக்கெட்டுகளை இணைய தளம் மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம் என துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**



இது தொடர்பாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில்,

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் சென்னையின் முதன்மையான செஸ் போட்டியின் இரண்டாவது பதிப்பான சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் 2024ஐ நடத்துவதில் மகிழ்ச்சி அடைவதாகவும், இந்த நிகழ்வு நவம்பர் 5 ஆம் தேதி முதல் 11 ஆம் தேதி வரை சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மாஸ்டர்ஸ் மற்றும் சேலஞ்சர்ஸ் ஆகிய இரு பிரிவுகளிலும் தலைச்சிறந்த வீரர்கள் பங்கேற்று, தங்களது விதிவிலக்கான திறமைகளை வெளிப்படுத்துவார்கள் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார். செஸ் போட்டிகளை காண 100 ரூபாய் கட்டணம் செலுத்தி முன்பதிவு செய்யலாம் என்றும், டிக்கெட்டுகளை in.bookmyshow.com/sports/chennaigrandmasters2024/ET00418069 என்ற இணைய தளத்தில் முன்பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், ஒரு வாரம் நடைபெறும் பரபரப்பான செஸ் போட்டியில் தங்களுடன் இணையவும் அழைப்பு விடுத்துள்ளார்.

---

# வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி !

சென்னை, நவ.5-

வடகிழக்கு பருவமழை கடந்த மாதம் (அக்டோபர்) 15ந் தேதி தொடங்கியதாக அறிவிக்கப்பட்டாலும், கிழக்கு திசை காற்று முழுமையாக தென் இந்திய பகுதிகளில் பரவ பருவ மழை முழுவதுமாக தொடங்க உள்ளது.

அதன்படி, தமிழ்நாட்டின் வட கடலோர மாவட்டங்களில் இன்று (5ந் தேதி) அதிகாலையில் இருந்தே மழைக்கான வாய்ப்பு தொடங்கி விடும் என்றே சொல்லப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக தென் இந்திய பகுதிகளில் சில இடங்களில் மழை பெய்யக்கூடும்.

இந்த நிலையில் பருவ மழையின் தீவிரத்தை காட்டும் வகையில் வங்கக் கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருக்கிறது.

அந்த வகையில் தெற்கு வங்கக்கடலில் வருகிற 7 அல்லது 8ந் தேதி குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளது. இது தொடர்ந்து வலுப்பெற்று வட தமிழக பகுதிகளை நோக்கி நகரக் கூடும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.